உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

*S.C No.583/2023*

| | | |
|---|---|---|
| பெயர் | : | அமிர்தம்*(அ.சா.2)* |
| தகப்பனார் பெயர் | : | |
| கணவர் பெயர் | : | அழகுசெட்டியார் |
| வயது | : | *50* |
| கிராமம் | : | பூதமங்களம் |
| வட்டம் | : | மேலூர் |
| தொழில் | : | கூலிவேலை |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

*20.08.2024*

முதல் விசாரணை*:*

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். *2*வது எதிரி என் கணவருடைய உடன்பிறந்த தம்பியும், தம்பியின் மனைவியும் ஆவர். நதியா என்னுடைய ஒரே மகள் ஆவார். சுமார் *3* ஆண்டுகளுக்கு முன்னர், *19*ம் தேதி மாதம், வருடம் நினைவில்லை அன்று எங்களுடைய இடத்தில் உள்ள மரங்களையும், கல்லுக்கால்களையும், ஆஜர் எதிரிகள் இருவரும் விற்றுவிட்டார்கள். நான் என் மகளிடம் போன் செய்து நடந்ததை கூறினேன். என் மகள் போன் அடித்து ஆஜர் எதிரிகளிடம் பேசினார். ஆஜர் *2*வது எதிரி கெட்ட கெட்ட

வார்த்தைகளால் அ.சா.1 ஆன என் மகளை பேசியிருக்கிறார். மறுநாள் 20ம் தேதி என் மகள் என்னிடம் அதை தெரிவித்தார். மறுநாள் நானும், என் மகளும் சென்று பூதமங்களத்தில் என்னை அழைத்துக்கொண்டு சென்று ஆஜர் எதிரிகளிடம் கேட்டார்கள். ஆஜர் 2வது எதிரி, என் மகள் மீது எண்ணெயை காய வைத்து அவள் மீது ஊத்தும்படி கூறினார். ஆஜர் 1வது எதிரி எண்ணெயை காய வைத்து அப்படியே ஊற்றிவிட்டார் மேலும் 2வது எதிரி என் மகளை கொல்லாமல் விடமாட்டோம் என்று கூறினார். என் மகள் மீது ஊற்றியவுடன் என் மகளுக்கு சுயநினைவில்லாமல் இருந்தது, உடனே 108 க்கு தகவல் கொடுத்தோம். நான் உடனே என் மகளுடைய மாமியார், மாமனாருக்கு சதீஷ், பஞ்சு ஆகியோருக்கு தகவல் கொடுத்தோம், அவர்கள் வந்து மேலூர், அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு பார்க்க முடியாது என்று கூறவே, மதுரை, கென்னட் மருத்துவமனைக்கு என் மகளை அழைத்துச்சென்றோம். என் மகளின் கணவர் அப்போது வெளிநாட்டில் இருந்ததால் அவருக்கு தகவல் கொடுத்து, அவர் நான்கு நாட்களில் இந்தியா வந்துவிட்டார். காவல்நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்று நினைவில்லை. நான் படிக்காத ஆள் என்பதால் அதுபற்றி தெரியவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் என்னை யாருமே விசாரிக்கவில்லை. என் மகளை மட்டும் விசாரித்தார்கள். எனக்கு வேறு எதுவும் நினைவில்லை.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

அ.சா.1 நதியாவை கோட்டநத்தாம்பட்டி, அண்ணாநகரில் திருமணம் முடித்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என் மருமகன் பெயர் முனீஸ்வரன் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்னரே ஆஜர் எதிரிகளுக்கும், எங்கள் தரப்புக்கும் சொத்து பிரச்சினை இருந்து வந்தது என்றால் சரிதான். இடத்தை கொடுக்கவில்லை என்று பிரச்சினை செய்து

வந்தார்கள். பிரச்சினை செய்தது தொடர்பாக புகார் எதுவும் நாங்கள் கொடுத்தோமா என்றால் இல்லை. இந்த வழக்கில் அ.சா.*1* நதியா என் மகள், சாட்சி பட்டியலில் *6*வது சாட்சியான சதீஷ்குமார் என் மகளினுடைய கொழுந்தனார் என்றால் சரிதான். சாட்சி பட்டியலில் *7*வது சாட்சியான பஞ்சவர்ணம் என் மகளுடைய மாமியார். என் மகளை சம்பவத்திற்கு பிறகு நான் தான் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். அவருடன், என் மகள் மாமியாரும், கொழுந்தனாரும் வந்தார்கள். உடலில் காயம் ஏற்பட்டவுடன் என் மகள் வலி தாங்கமுடியாமல் கதறினார். அப்போதே பஞ்சுவிற்கும், என் மகளின் கொழுந்தனுக்கும் போன் செய்து விட்டோம். அங்கே வந்துவிட்டார்கள், அவர்கள் வந்த பிறகு தான் *108* ஆம்புலன்சுக்கு தகவல் கொடுத்தோம். அதற்கு முன்பாக அங்கே யாரும் வரவில்லை என்றால் சரிதான். என் மகளை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லும் போது அவருக்கு சுயநினைவு இல்லை. என்னை மருத்துவர் மருத்துவமனையில் விசாரித்தாரா என்றால் இல்லை. எண்ணெயை ஊற்றிய போது அருகில் நான் இருந்ததால் என் மீதும் காய்ச்சிய எண்ணெய் தெரித்ததால் கண் மற்றும் முகத்திலும் பட்டுவிட்டது. நானும், எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அரசு மருத்துவமனை மேலூரில் நானும் முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மருத்துவமனையில் மருந்து போட்ட பிள்ளைகளிடம் நடந்தவற்றை கூறினேன், எந்த இடத்தில், எந்த ஊரில், எத்தனை மணிக்கு யாரால் சம்பவம் நடந்தது என்பதை தெரிவித்துவிட்டேன். என் மகளிடம் காவலர்கள் விசாரணை செய்தார்களா என்று எனக்கு நினைவில்லை. என் மகளிடம் விசாரணை போலிசார் செய்யாமல் கையெழுத்து மட்டும் வாங்கி சென்று விட்டார்களா என்றால் ஆமாம். மேலூர், அரசு மருத்துவமனைக்கு வந்தவுடன் சிகிச்சை செய்ய முடியாது என்று கூறவே மதுரைக்கு உடனே தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டோம். மேலூர் அரசு மருத்துவமனையில் சுமார் அரை மணி நேரம்

இருந்தோம். மதுரை, மருத்துவமனையில் என் மகளுக்கு தீவிர சிசிச்சை அளிக்கப்பட்டது, அவர் ஒரு வாரம் கழித்து தான் எங்களிடம் பேசினார். சதிஷ்கோபி, சேவுகபெருமாள், பாலமுருகன், கிருஷ்ணன் ஆகியோர் எங்கள் ஊர்காரர்கள், எங்கள் உறவினர்கள் தான். நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், ஏற்கனவே என் குடும்பத்திற்கும், ஆஜர் எதிரிகள் குடும்பத்திற்கும், குடும்பகதராறு இருந்ததை பயன்படுத்தி என் மகளின் கவனக்குறைவினால் நடந்த விபத்தை எதிரிகளுக்கு எதிராக பயன்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை ; இல்லை.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**ஓம்.M.சாமுண்டீஸ்வரி பிரபா**
**உதவி அமர்வு நீதிபதி,**
**மேலூர்**